# மாகாண கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்
## க.பொ.த (உ/த) முன்னோடிப் பரீட்சை – 2021
# Provincial Department of Education Northern Province
## G.C.E (A/L) Pilot Examination

| தரம் :- 13 (2021) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ***1* தொடக்கம் *50* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் *(1), (2), (3), (4), (5)* என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01. தொழில்சார் தொடர்பாடுநர்கள் இயந்திர ஊடகங்களின் துணையோடு பரந்த அளவிலும் உடனடியாகவும் தொடர்ச்சியாகவும் விசாலமான பல்வேறு விதமான பெறுநர் கூட்டத்திற்குத் தகவல் அனுப்பி யாதேனும் தாக்கத்தினை ஏற்படுத்தும் செயற்பாடு வெகுசனத் தொடர்பாடல் என வரையறை செய்த அறிஞர்கள்

    1) ஹாய்பர்ட், அன்குராய்ட் 2) டெவுளர், டெனிஸ் 3) டெவுளர், ஹய்பர்ட்
    4) டெவுளர், அன்குராய்ட் 5) போன், ஹாய்பர்ட்

02. தொடர்பாடல் செயலொழுங்கில் குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பாக முதன் முதலில் கருத்தியலை உருவாக்கிய அறிஞர்கள்.

    1) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
    2) ஹரோல் டி. லாஸ்வெல்
    3) குளோட் ஷனேன் மற்றும் வொரன் வீவர்
    4) அரிஸ்ரோட்டில்
    5) போல் லசார் பீல்ட்

03. தொடர்பாடுநர் தகவலை வழங்கிய பின் அதனைப் பெறுபவர் அது தொடர்பாக அவதானிக்க கூடியவாறான ஒரு எதிர்வினையை வெளிப்படுத்தி கொள்ளும் செயன்முறையை அடையாளப்படுத்துவது.

    1) உச்சஸ்தானம் 2) சந்தர்ப்பம் 3) இரைச்சல் / இடையூறு
    4) பின்னூட்டல் 5) தாக்கம் / விளைவு

04. வெளியாட்களின் தலையீட்டு மற்றும் வெளிநிலை கருவிகளின் தேவைப்பாடுகள் இன்றி நடைபெறக்கூடிய தொடர்பாடல் வகை.

    1) ஆளுள் தொடர்பாடல் (தனியாள் தொடர்பாடல்)
    2) ஆட்களிடைத் தொடர்பாடல்
    3) குழுத்தொடர்பாடல்
    4) வெகுசனத் தொடர்பாடல்
    5) வாய்மொழி சாராத தொடர்பாடல்

05. பின்வரும் அம்சங்களுள் தொடர்பாடல் செயன்முறை ஒன்றில் அடிப்படை அம்சமாக காணப்படாதது.
1) தொடர்பாடுநர் 2) தகவல் 3) பெறுநர் 4) ஊடகம் 5) வாயிற்காப்பு

06. இலங்கையில் தமிழில் ஊடககற்கை துறைசார்ந்த பட்டப்படிப்புக்களினை வழங்கும் பல்கலைக்கழகம் எது.
1) கொழும்புப் பல்கலைக்கழகம்
2) கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்
3) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
4) கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம்
5) தெஹிவளை கனிஸ்ட பல்கலைக்கழகம்

07. வானொலி ஊடகத்தின் இயல்புகளோடு தொடர்புடைய விடயமல்லாதது.
1) விரைவான செய்திக்கடத்துகை நடைபெறும்
2) முழு வலயத்தினையும் உள்ளடக்க கூடியது
3) எளிமையான மொழிநடை பயன்படுத்தப்படும்
4) பேசுவோன் கேட்போன் சம நேரத்தில் தொடர்பாடுவார்
5) மிகவும் செலவு கூடிய ஊடகமாகும்

08. அறிவு, பழக்கவழக்கங்கள், கலைகள், சட்டங்கள், விழுமியங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமூகப்பிராணி என்ற வகையில் ஏனைய ஏதேனும் முறைகளால் மனிதன் பெற்றுக்கொண்டுள்ள பழக்கங்கள் மற்றும் ஆற்றல்கள் அடங்கிய அம்சம் பண்பாடு என வரைவிலக்கணப்படுத்துபவர்.
1) மார்கஸ் போர்சியஸ் 2) இ. பி. ரெய்லர் 3) பி. மலினோவுஸ்கி
4) ரல்ப் லிண்டன் 5) போராசிரியர் விமல்திசநாயக்கா

09. வகுப்பறை ஒன்றில் ஒரு தொகுதி மாணவர்களிடையே நடைபெற்ற கலந்துறையாடல் பின்வருமாறு.
ரணில் - ஆழமற்ற ஒன்றாக காணப்படுகின்றமை
அணில் - வியாபார நோக்கத்தினை அடிப்படையாக கொண்டது
சுணில் - மேலைத்தேய மயமாக்களின் விளைவாக உருவானது
கவின் - அடிக்கடி மாற்றங்களிற்கு உள்ளாக கூடிய தன்மை
அகில் - வெகுசனப் பண்பாட்டின் உபபிரிவாக தோற்றம் பெற்றமை
மேற்குறிப்பிட்ட கலந்துயைாடலில் தெரிவித்த கருத்தியல்களினை புலப்படுத்தும் பண்பாடு
1) வெகுசனப் பண்பாடு 2) ஊடகப் பண்பாடு
3) மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு 4) பிரசித்த பண்பாடு 5) பூகோளப் பண்பாடு

10. தரம் 13 இல் ஊடகக்கற்கை பாடத்தினை பயிலும் மாணவர்களில் ஒரு தொகுதியினரிடையே இடம் பெற்ற கலந்துரையாடல் வருமாறு.
கோபி - எழுத்துக்களை எழுதும் வாசிக்கும் ஆற்றல் விளங்கறிவு என குறிப்பிடப்படுகின்றது
தபேதன் - ஊடகங்களினை ஆய்வு செய்தல் ஊடக விளங்கறிவு எனலாம்
திவேதன் - ஊடக விளங்கறிவு ஒருவரது பிறப்போடு தொடர்புடைய ஒன்றல்ல
வைஸ்ணவன் - ஊடகத்தால் முன்வைக்கப்படும் தகவலை பகுப்பாய்வு செய்யும் ஆற்றல்
பிரியங்கன் - ஊடகம் கொண்டுவரும் நன்மையான விடயங்களினை மாத்திரம் ஆராய்தல்

**மேற்குறிப்பிட்டவர்களில்** ஊடகவிளங்கறிவு பற்றிய கருத்தியல்களினை முன்வைத்தவர்கள்.

1) தபேதன், திவேதன், வைஸ்ணவன்
2) கோபி, தபேதன், திவேதன்
3) கோபி, வைஸ்ணவன், பிரியங்கன்
4) கோபி, தபேதன், திவேதன், வைஸ்ணவன்
5) கோபி, தபேதன், திவேதன், வைஸ்ணவன், பிரியங்கன்

11. விமர்சன ரீதியான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகளோடு தொடர்புபடாதது

1) உய்த்தறிதல் திறன் 2) பகுப்பாய்வுத் திறன் 3) மதிப்பீடு செய்யும் திறன்
4) சாராம்சப்படுத்துதல் 5) செய்தியை உருவாக்கல்

12. எதிர்பார்த்த பெறுபேறுகளை முன்வைக்கும் போது வெற்றியினை அடைதல் வினைத்திறனாகும். வினைத்திறனான தகவலில் காணப்படும் பண்புகளோடு தொடர்புபடாத அம்சம்.

1) எளிமைத்தன்மை (Simplicity) 2) விசேட தன்மை (Specificity)
3) கட்டமைப்பு (Structure) 4) திரிபுபடுத்தல் (Distortion)
5) இசைவாக்கம் (Stickiness)

13. ஒரு கட்புல படைப்பு ஒன்றினை இரசிக்கும் இரசிகர்களின் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்களினை உருவாக்கும் பொருட்டு கதாபாத்திரத்தின் அல்லது பொருளினுடைய நுட்பமான பண்புகள் உணர்வு வெளிப்பாடு என்பவற்றை வெளிப்படுத்த உதவும் கமரா காட்சி.

1) அண்மைநிலை எடுப்பு (Close up)
2) இடைநிலை நீள் எடுப்பு (Medium long shot)
3) இடைநிலை அண்மைக்காட்சி (Medium close up)
4) நீள் எடுப்பு (Long shot)
5) நெடுந்தொலை எடுப்பு (Very long shot)

14. பின்வரும் விடயங்களில் ஆற்றுகை அல்லது அளிக்கை எனும் அம்சத்துடன் **தொடர்புபடாத** அம்சம்.

1) இரசிகர்கள் முன்னிலையில் உருவாக்கப்படும் காட்சிவழி
2) உடல் மொழி முகபாவம் சலனம் என்பன இதிலடங்கும்
3) வாய்மொழி சாராத அம்சங்களினையும் உள்ளடக்கியிருக்கும்
4) பிறக்கும் கணத்தில் இறக்கும் தன்மையற்றது
5) பார்வையாளர்களினை உடன் எதிராக கொண்டது

15. நாட்டாரியல் என்பது அடிப்படை அல்லது சிக்கலான நிலமைக்குப்பட்ட நவீன அல்லது மக்கள் சமூகத்திற்கு இடையில் நீண்ட காலமாக வாய்மொழி வழியாக விருத்தியடைந்த ஒரு வளம்மிக்க செல்வமாகும் என வரையறை செய்த அறிஞரும் நூலும் முறையே.

1) சுனந்த மஹேந்திரா, தொடர்பாடல் ஓசை
2) நந்தசேனரத்னபால, நாட்டாரியல் விஞ்ஞானம்
3) ஸ்ரீ லியனகே, நாட்டாரியல் அகராதி
4) சுகதபால டி சில்வா, ஹன்ட் நலுவா
5) சுனந்த மஹேந்திரா, படைப்பாக்க ரீதியான தொடர்பாடல்

16. அமெரிக்காவில் நடைபெற்ற வேலை நிறுத்தப்போராட்டங்களினை அடிப்படையாகக் கொண்டு உலகில் முதலாவது பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தினை ஆரம்பித்துக் கொண்ட நபர்.
1) எட்வர்ட் எல். பெர்ணீஸ் 2) ஐவி லீ 3) ரோட் ஹன்ட்ஸ்
4) ஜேம்ஸ் குரூனிக் 5) ஜீலியஸ்சீசர்

17. பொதுமக்கள் தொடர்புச் செயற்பாடானது மேம்படுத்தல் செயல் ஒழுங்கில் ஒரு பிரிவாக காணப்படுகின்றது. மேம்படுத்தல் கலவை செயற்பாட்டோடு தொடர்புபடாத அம்சம்.
1) விளம்பரப்படுத்தல் 2) பிரசித்தப்படுத்தல் 3) உற்பத்தி செய்தல்
4) பொதுசனத்தொடர்பு 5) தனியாள் சந்தைப்படுத்தல்

18. ஏதேனும் ஓர் அமைப்புடன் தொடர்புடைய உள்ளக மற்றும் வெளியக அனைத்து தரப்பினருக்குமிடையிலும் பரஸ்பரப் புரிந்துணர்வை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் பொதுமக்கள் தொடர்பு ஆகும் என வரையறை செய்தவர்.
1) சார்ள்ஸ் பிளேகார்ட் (Charles placard)
2) எட்வர்ட் எல் பெர்ணீஸ் (Eaward .L. Bernays)
3) சாம் பிளக் (Sum black)
4) ஜோசப் ஆர் டொமினிக் (Joseph R. Dominick)
5) பிலிப் ஜே கிச்சன் (Philip J. kitchen)

19. இலங்கையில் உள்ள நாடோடி மக்கள் இலங்கையில் பண்பாட்டுப் பாரம்பரியங்களினை உள்வாங்கியுள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது இது
1) பண்பாட்டுப் பரவுகையாகும் 2) பண்பாட்டு ஆர்முடுகலாகும்
3) பண்பாட்டு அதிர்வாகும் 4) பண்பாட்டு தேக்கமாகும்
5) துணைப்பண்பாட்டாக்கமாகும்

20. குறிமுறையவிழ்ப்புச் செயற்பாடொன்றினை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு ஏதுவாகும் காரணியை புலப்படுத்துவது
1) பின்னூட்டல் 2) தாக்கம் 3) உச்சஸ்தானம்
4) வாயிற்காப்பு 5) பொருட்கோடல்

21. அபிவிருத்திக்கான நோக்கங்களோடு தொடர்புபடாத அம்சம்.
1) தேவைகளை மையப்படுத்தாத நடவடிக்கை
2) சுய நிர்ணயம்
3) தன்னம்பிக்கை
4) சிறந்த சூழலை கட்டியெழுப்பல்
5) பங்கு பற்றல் ஜனநாயகம்

22. இனங்களிற்கிடையே செய்தி பரவும் விதம் பற்றியம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் செய்தி பற்றிய குறைவான அவதானம் மற்றும் யதார்த்தத்தை திரிபுபடுத்துவதற்கான போக்கு காணப்படுவதாக குறிப்பிட்ட அறிஞர்.
1) ஹேர்பட் ஷெல்லர் 2) சீன் மக்பிறைட்டின் 3) வில்பர் ஷ்ராம்
4) எட்கர் ஒவ்வன்ஸ் 5) ஹரோல் டி. லாஸ்வெல்

23. கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்குபற்றலை அதிகரிப்பதற்காக வெளிப்படைத்தன்மை, அரச பொறுப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் ஊழலுக்கு எதிரான தகவலைப் பெற்றுக் கொள்ளும் உரிமை இலங்கையில் உறுதி செய்யும் சட்டம்
1) புலமைச் சொத்துசட்டம் 2) கருத்து வெளியீட்டுச் சுதந்திர சட்டம்
3) ஊடகத்தணிக்கை சட்டம் 4) தகவல் அறியும் சட்டம்
5) நியாயமான பாவனைக் கோட்பாட்டு சட்டம்

24. அந்தரே வேதாளம் பற்றிய நாட்டார் கதையை வகுப்பறையில் கற்பித்த ஊடாக கற்கை பாட ஆசிரியர் கதையில் உங்களை மிகவும் கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தை சித்திரமாக வரையுமாறு குறிப்பிட்டார். மாணவர்களிடமிருந்து ஆசிரியர் எதிர்பார்க்க கூடியது.
   1) சித்திரம் பற்றிய திறனை அறிதல்
   2) படைப்புத் தொடர்பாடல் திறன்களை அறிதல்
   3) யாதாயினும் ஒன்றை நிச்சயமாக இனங்கானும் ஆற்றலை அறிந்து கொள்ளுதல்
   4) கலை தொடர்பாக உள்ள விளக்கத்தை அவதானித்தல்
   5) நாட்டார் கதை பற்றிய விளக்கத்தை இனங்காணுதல்

25. இலங்கையில் இலத்திரனியல் செய்திகள் மற்றும் இலத்திரனியல் ஊடக தொழிற்துறையின் தணிக்கைச் செயற்பாடு போன்றவற்றினை மேற்கொள்ளும் அல்லது ஒழுங்குபடுத்தும் அமைப்பு.
   1) இலங்கைப்பத்திரிகை பேரவை
   2) பொது அளிக்கை கட்டுப்பாட்டு சபை
   3) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
   4) இலங்கை தொலைத்தொடர்புகள், ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
   5) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம்

26. பின்வரும் அம்சங்களில் நிறுவனம் ஒன்றின் உள்ளகப் பொதுசனத் தொடர்புத்திட்டத்தோடு தொடர்புடைய அம்சங்களை மாத்திரம் கொண்ட தொகுதி.
   1) நலன்புரி அமைப்புக்கள், குறைகேள் அதிகாரி, பத்திரிகை, ஊடகமாநாடு
   2) ஊடகமாநாடு, நலன்புரி அமைப்புக்கள், சுற்றுலா, கூட்டங்கள்
   3) கூட்டங்கள், சுற்றுலா, ஊடகக் கலந்துரையாடல், பத்திரிகை
   4) சுற்றுலா, கலந்துரையாடல், நலன்புரி அமைப்புக்கள், உள்ளகத்தொலைபேசி
   5) வெளியகத்தொலைபேசி, சுற்றுலா, ஊடகமாநாடு, நலன்புரி அமைப்புக்கள்

27. பாடசாலையின் ஊடகக்கழகத்தில் மாணவர்கள் சிலர் அபிவிருத்தி தொடர்பாடல் அவசியம் பற்றி தமது கலந்துரையாடலினை மேற்கொண்டனர்.

   தர்மிகா - மக்களை அடிப்படையாகக் கொண்ட வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்

   லக்சனா - மக்களை அடிப்படையாகக் கொண்ட இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களிற்கு இசைவாதல்

   காருண்யா - விவசாயக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் உணவுப்பாதுகாப்பிற்கான நாட்டார் தொடர்பாடல் அமைப்புக்கள் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.


   மேற்குறிப்பிட்ட மாணவர்களின் கருத்து தொடர்பாக கவனம் செலுத்திய அமைப்பு.
   1) ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO)
   2) ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)
   3) ஐக்கிய நாடுகளின், சிறுவர் நிதியம் (Unicef)
   4) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய ரோம் மாநாடு.
   5) சுவீடன் நாட்டு மாலமோ பல்கலைக்கழகம்

28. இலங்கையில் தகவல் அறியம் உரிமையும் அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தம்
   1) பதின்மூன்றாவது திருத்தச்சட்டம்
   2) எட்டாவது திருத்தச்சட்டம்
   3) பத்தொன்பதாவது திருத்தச்சட்டம்
   4) இருபதாவது திருத்தச்சட்டம்
   5) பதினைந்தாவது திருத்தச்சட்டம்

29. பின்வரும் கருத்தியல்களில் பூகோளமயமாதலுடன் தொடர்பினை வெளிப்படுத்தாத கூற்று
   1) தொழினுட்ப வளர்ச்சியின் பரவல்
   2) தேசிய எண்ணக்கரு வலுவடைதல்
   3) சமூகங்களிடையே போட்டித்தன்மை உருவாதல் .
   4) பல்லின வியாபாரம் முன்வருதல்
   5) தனிப்பட்ட மூலதனத்தின் ஓட்டம் விருத்தியடைதல்.

30. இலங்கையின் ஊடக உள்ளடக்கப் போக்கும் ஏனைய நாடுகளினைப் போன்றே மாற்றமடைந்து வருகின்றது. இவற்றோடு தொடர்புபடாத கூற்று
   1) எளிமையான மொழிப்பாவனை
   2) வர்த்தக விளம்பரங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல்.
   3) புதிய முன்வைப்பு பாணிகள் பயன்படுத்தப்படல்.
   4) பொழுதுபோக்கிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படல்.
   5) செய்தி அறிவிப்பிற்கு அதிக முக்கியம் வழங்கப்படல்.

***31 – 35 வரையான வினாக்களிற்குக் கீழ்வரும் மாதிரியை அடிப்படையாக்க கொண்டு விடையைத் தெரிவு செய்க.***




31. மேற்குறித்த மாதிரி உருவின்படி குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்புச் சந்தர்ப்பத்தினைச் சுட்டி நிற்பது
   1) A மற்றும் H    2) B மற்றும் D    3) C மற்றும் F
   4) D மற்றும் G    5) B மற்றும் I

32. கொரோனா இடர் பற்றிய செய்தி ஒன்று மேற்குறித்த வழிமுறையில் கடத்தப்பட்டது எனினும் F இனால் அதனைச் சரிவர விளங்கிக் கொள்ள முடியாமலிருந்தது. இச்சூழலை அடையாளப்படுத்தும் ஆங்கிலப் பதம்
   1) A என    2) B என    3) C என    4) H என    5) I என

33. மேற்குறித்த மாதிரி உரு தொலைபேசிக் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டது. இங்கு தகவலைக் கடத்தும் பகுதியைச் சுட்டி நிற்பது
   1) A ஆகும்.    2) **A** ஆகும்.    3) C ஆகும்.
   4) F ஆகும்.    5) H ஆகும்.

34. மேற்குறித்த மாதிரி உருவில் பின்னூட்டம் உள்ளீர்க்கப்படுமாயின் அங்கு தகவல் பயணிப்பதளைப் புலப்படுத்திக் காட்டுவது
   1) A யிலிருந்து H இற்கு    2) C யிலிருந்து H இற்கு    3) A யிலிருந்து I இற்கு
   4) F யிலிருந்து C இற்கு    5) H யிலிருந்து A இற்கு

35. 1934 அமெரிக்காவில் நிறுவப்பட்ட சமஸ்டி தொடர்பாடல் ஆணைக்குழுவின் முதன்மையான நோக்கமாவது
   1) வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தை பிரசித்தப்படுத்தல்.
   2) வானொலி மற்றும் தொலைக்காட்சி வணிக நோக்கங்களினை செயலூக்கப்படுத்துதல்.

3) வெகுசன ஊடக நிறுவனம் இடையேயான போட்டியை இழிவளவாக்குதல்.
4) அபிவிருத்தி நோக்கங்களுக்காக மக்களை செயலூக்கப்படுத்துதல்.
5) வெகுசன ஊடக நிறுவனங்களிற்கிடையேயான தொழில்நுட்பச் சிக்கல்களை ஒழுங்கு முறைப்படுத்துதல்.

36. அபிவிருத்தி எனும் எண்ணக்கருவின் இயல்புகள் குறித்து ஒரு தொகுதி மாணவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு

யாகன்யன் -1990 களில் சர்வதேச அபிவிருத்தி சிந்தனையில் அவதானத்தைப் பெற்றது.

சாருஜன்- அடிப்படைச் சமூக சேவைகளுக்கான வாய்ப்பு வழங்குதல்.

டினோசன்- பாதிக்கப்படும் பெண்களுக்குத் தீர்வினைப் பெறுதல்.

திலக்சன்- நிலையான சீவனோபாயம், தொழில் வாய்ப்பு. வினைத்திறனான வளங்களுக்கான பிரவேசங்களை அதிகரித்தல்.

மேற்குறித்த விடயங்களுடன் தொடர்புபடும் எண்ணக்கரு

1) உள்ளூர் மயமாக்கல்
2) வறுமையை ஒழித்தல்.
2) மக்கள் மையம்
4) சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தை கட்டியெழுப்புதல்.
5) கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்குபற்றுதல்.

37. தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் தமது கருத்துக்களும் கொள்கை விளக்கங்களும் மக்களைச் சென்றடைவதற்காக ஊடகங்களில் வெளியிட்டுக் கொள்ளும் நோக்குடன் ஒழுங்குபடுத்தும் பொதுசனத் தொடர்பு முறை

1) வீடியோ செய்தி வெளியீடு
2) பத்திரிகைவெளியீடு / ஊடக வெளியீடு
3) ஊடகவியலாளர் மாநாடு
4) ஊடக குறு வெளியீடு
5) புகைப்பட அறிவிப்பு

38) நிகழ்நிலை தரவு தொகுதியொன்றினூடாக வெவ்வேறு தகவல் மூலங்களுக்குள் பிரவேசிக்க முடியுமாயிருப்பதனை குறிப்பிடும் சொல்.

1. எண்ணிமப்படுத்தல். (Digitalization)
2. வலையமைப்பாதல் (Networking)
3. இடைத்தொடர்பு (Interactivity)
4. மீயுரை (Hypertexuality)
5. தானியங்கி (Automation)

39) படைப்பாக்கம் ஒன்றிற்கான கருப்பொருளைப் பெற்றுக் கொள்வதற்கான மூன்று அடிப்படை முறைகளாவன.

1. அறிவாற்றல், மீளுணர்தல், மற்றும் புலனணுர்வு என்பதாகும்.
2. தமது பிறரது மற்றும் ஊடகத்தின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் என்பதாகும்.
3. சுயபேச்சு, கற்பனை மற்றும் வழித்தோன்றல்கள் என்பனவாகும்.
4. உணர்தல், புலணுணர்தல், மற்றும் இலக்கிய விமர்சனம் என்பனவாகும்
5. சுயஅனுபவம், கற்பனை, அனுபவம் மற்றும் சமூகமயமாதல் என்பனவாகும்.

40) "நீங்கள் நினைத்தாலும் தொடர்பாடல் செய்யாமல் இருக்கமுடியாது" இக் கூற்றுடன் பொருந்துவது

1. தொடர்பாடலின் முக்கியத்துவம்
2. ஆளுள் தொடர்பாடலின் அவசியம்
3. ஆட்களிடைத் தொடர்பாடலின் அவசியம்
4. வாய்மொழி சாராத் தொடர்பாடல்
5. வாய்மொழித் தொடர்பாடல்.

41) பின்வரும் தொடர்புகளை அடிப்படையாக கொண்டு விடையளிக்குக.

A. i. பண்டைய தொடர்பாடல் அடிப்படை வழிமுறைகள்
ii. பறையடித்தல், தீமூட்டுதல்.

B. i. வர்த்தக ஆதிக்கத்துடன் தொடர்புபட்டது.
ii. பிரசித்த பண்பாடு

C. i. எழுத்து மொழிப்பயன்பாடு வெளித்தெரியும் ஊடகம்
ii. தொலைக்காட்சி

D. i. ஊடக நிறுவனத்தின் செயற்பாடுகள் கட்டமைப்பது.
ii. வாயிற்காப்பாளர்கள்.

இவற்றுள் நெருக்கமான தொடர்பினைக் காட்டுவது.

1. A, B 2. A, C 3. A, B, C 4. B, C, D 5. A, B, D

42) தேசிய ஊடக விளங்கறிவுக்கான அமெரிக்க தேசிய நிறுவன வரைவிலக்கணத்தின் படி ஊடகவிளங்கறிவு என்பதற்கான பண்புடன் **பொருந்தாதது.**

1) ஊடகங்களில் நுழைதல்.
2) ஊடகங்களை ஆய்வு செய்தல்.
3) ஊடகங்களை மதிப்பீடு செய்தல்.
4) ஊடகத்தில் செயற்திறனற்ற வகையில் செயற்படல்.
5) ஊடக உள்ளடக்க உருவாக்கம்.

43) பின்வருவனவற்றுள் ஊடக விளங்கறிவை கட்டியெழுப்புவதில் செல்வாக்கு செலுத்தும் மூன்று சித்தார்ந்தங்கள்.

1) தனிப்பட்ட அவதானம், மதிப்பீடு, இறையாண்மை.
2) திறன்கள், பகுப்பாய், தொகுத்தறிதல்.
3) தனிப்பட்ட அவதானம், திறன்கள், அறிவுக்கட்டமைப்பு.
4) பகுப்பாய்வு, மதிப்பீடு, சாராம்சம்.
5) தொகுப்பாக்குதல், உய்த்தறிதல், குழுவாக்கல்

44) தொலைக்காட்சி ஊடகத்தில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளினை சிறுவர்கள் பார்ப்பதனால் அவர்கள் மத்தியில் ஏற்படும் தாக்கங்கள் பற்றி வகுப்பறையில் மாணவர்கள் பின்வருமாறு கூறியிருந்தனர். இவற்றில் பேராசிரியர் வில்பர் ஷ்ராமின் ஆய்வு முடிவுகளுடன் பொருந்தும் கூற்றுக்களை தெரிவு செய்க.

சங்கீதா - வன்முறை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதனால் சிலருக்கு கோப உணர்வு மேலோங்கும்.
கிரிதரன் - சிறுவர்களின் சமூகத் தொடர்பு நலிவடையும்.
நிகேஷ் - பெற்றோர்களுடன் முரண்படும் நிலை ஏற்படும்.
ஜிலக்ஷன் - போதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்படும்.

1) சங்கீதா, ஜிலக்ஷன் 2) கிரிதரன், நிகேஷ் 3) நிகேஷ், சங்கீதா
4) ஜிலக்ஷன், நிகேஷ் 5) சங்கீதா, கிரிதரன்

45) A) மனிதனின் செயற்கையான நடவடிக்கையின் விளைவு

B) மனித அனுபவங்கள் மற்றும் ஆற்றல்களின் இணைவு

C) சமூகத்தை ஒன்றாக இணைக்காத பெறுதிகளைக் கொண்டது.

D) மானிட எண்ணக்கருக்கள், நம்பிக்கைகள் மற்றும் சம்பிரதாயங்கள் போன்றவற்றின் சேர்க்கை.

மேற்குறித்த கூற்றுக்களில் பண்பாட்டுடன் பொருந்தக் கூடியவை.

1) A, B, C 2) A, C, D 3) B, C, D 4) A, B, D 5) A, B, C, D

46. இலங்கையில் சர்வதேச நோய் பரவல் காரணமாக நடமாட முடியாத சூழல் உருவானது. இதனால் மாணவர்கள் கற்றல் சார் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு (Zoom) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இச்செயற்பாட்டினைக் குறிக்கும் தொடர்பாடல் வகை

1) மெய்நிகர் தொடர்பாடல் 2) புதிய ஊடகத் தொடர்பாடல் 3) சமூக ஊடகத் தொடர்பாடல்
4) பொதுசனத் தொடர்பாடல் 5) இணையத் தொடர்பாடல்

47. தொலைக்காட்சி விளம்பரம் மீதான கலந்துரையாடல் ஒன்று பாடசாலை ஊடக வட்டத்தில் நடைபெற்றது.

A- நுகர்வோர் எவ்வாறு பொருட்களை நுகர்கின்றனர் என்பதை விளம்பரங்கள் மாற்றத்திற்குள்ளாக்க முடியும்.

B- விளம்பரங்கள் வெகுசன ஊடகம் உயிர்வாழ அவசியம்

C- நம்பிக்கைத் தன்மையுடன் பொருட்களை கொள்வனவு செய்ய விளம்பரங்கள் அவசியம்

D- விளம்பரங்களினைச் சரியாகப் புரிந்துகொள்ள பெறுநர் ஊடக விளங்கறிவை கொண்டிருக்க வேண்டும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் இருந்து விளம்பரம் பற்றிய சரியான கருத்தினை முன்வைப்பவர்கள்.

1) A மற்றும் B 2) A, B மற்றும் C 3) B,C மற்றும் D
4) A, C மற்றும் D 4) A, B,C, D அனைவரும்.

48. வெகுசன ஊடகப் பெறுநர்கள் ஐவரது ஊடகப் பாவனை பற்றிய தகவல் கீழே காணப்படுகின்றது.

A- செய்திப் பத்திரிகைகள் மீதான பார்வையை முன்வைக்கும் காலைநேரத் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு நகரத்திற்குச் சென்று பத்திரிகை வாங்குவார்.

B- கைத்தொலைபேசியில் காலைநேர வானொலி செய்தி அறிக்கையைச் செவிமடுத்துவிட்டு பெற்றுக்கொண்ட குறுந்தகவல்களை (News Alerts) வாசிப்பார்.

C- அலுவலகத்திற்குச் செல்லும் போது திறன் தொலைபேசி (Smart Phone) மூலம் செய்தி இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்குள் பிரவேசிப்பார்.

D- இரவு உறங்குவதற்கு முன்னர் தொலைக்காட்சிச் செய்தி மற்றும் வானொலிச் செய்திகளை இணையதளங்களில் ஆராய்ந்து, செய்திப் பத்திரிகை இணையத் தளங்களை சமூக ஊடகங்கள் மூலம் வாசிப்பார்.

E- You Tube மூலம் திரைப்படம் ஒன்றைப் பார்த்து முகநூல் (Face Book) மூலம் செய்தி Post களை வாசிப்பார்.

மேற்காணும் பெறுநர்களில் ஊடகக்குவிகையுடன் மிகவும் நெருக்கமுடைய பெறுநர் குழுவில் இடம்பெறுவோர்.

1) A, B, C மற்றும் E ஆகியோர் 2) A, C,D மற்றும் E ஆகியோர்
3) B, C ,D மற்றும் E ஆகியோர் 4) B, D மற்றும் E ஆகியோர்
5) C, D மற்றும் E ஆகியோர்

49. ஆய்வு ஒழுக்கநெறிகள் பற்றிய இரண்டு கூற்றுக்கள் கீழே காணப்படுகின்றன.

A- தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஆய்வாளரின் அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தாமை

B- விரும்பிய நேரத்தில் தரவு வழங்குநர் ஆய்வுச் செயன்முறையினின்று விலக அனுமதி அளித்தல்.

இக்கூற்றுக்களில்

1) A உண்மையாவதோடு B பொய்யாகும்.
2) A பொய்யாவதோடு B உண்மையாகும்.
3) A மற்றம் B ஆகிய இரு கூற்றுக்களும் பொய்யானவையாகும்.
4) A மற்றும் B ஆகியன உண்மையாவதோடு A மூலம் B உறுதிப்படுத்தப்படுகிறது.
5) A மற்றும் B ஆகியன உண்மையாவதோடு B மூலம் A உறுதிப்படுத்தப்படுகிறது

50. பாடசாலை ஊடகக்கழகத்தினால் பிரசுரிக்கப்படும் வார சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் சில கீழ்வருமாறு

A- விமர்சனரீதியான ஊடக நுகர்வு
ஊடக ஒழுக்கநெறிகள் பற்றிய அறிவு

B- ஊடகக் கொள்கைகள் குழு ஒன்றை நியமித்தல்.
ஊடக வரையறை

C- தகவல் பெற்றுக்கொள்ளுதல் பற்றிய அறிவு
சிறந்த பிரஜையாக அபிவிருத்திக்கு துணைபுரிதல்

D- சந்தர்ப்பத்திற்கு உகந்த மொழிப்பாவனை
படைப்பாக்க ரீதியான திறன் விருத்தி

மேற்காணும் விடயங்களில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் பாடத்தைக் கற்பதன் தேவை பற்றிய இழிவளவான முக்கியத்துவத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

1) A, C மட்டும். 2) B, D மட்டும் 3) C, D மட்டும்
4) A மட்டும் 5) B மட்டும்.